## வகுப்பு - 8 - வரலாறு, 4. மக்களின் புரட்சி

106. பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கித் தன் படையை நகர்த்திய நாள்

(1) 17.10.1799 (2) 16.10.1799 (3) 5.9.1799 (4) 24.10.1801

107. கட்டபொம்மன் விசாரிக்கப்பட்ட நாள்

(1) 17.10.1799 (2) 16.10.1799 (3) 5.9.1799 (4) 24.10.1801

108. ஆங்கிலப்படை சிவகங்கையின் மீது போர் தொடுத்த ஆண்டு

(1) 1772 (2) 1799 (3) 1798 (4) 1792

109. வேலுநாச்சியார், கோபால நாயக்கர் பாதுகாப்பில் எங்கு வாழ்ந்தார்?

(1) திருப்பாச்சி (2) ராமநாதபுரம் (3) கடலூர் (4) விருப்பாச்சி

110. இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண் அரசி யார்?

(1) லட்சுமிபாய் (2) ரசியா பேகம்

(3) வேலுநாச்சியார் (4) மங்கம்மாள்

111. மருது சகோதரர்களின் தந்தை யார்?

(1) ஜெகவீரபாண்டியன் (2) மூக்கையா பழனியப்பன்

(3) முத்து வடுகநாத பெரிய உடையதேவர் (4) கோபால நாயக்கர்

112. ஆங்கிலக் கம்பெனி, சிவகங்கைக்கு எதிராகப் போர் புரிந்ததன் காரணம்/ காரணங்கள் தேர்ந்தெடு.

காரணம் i: கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரைக்குச் சிவகங்கை ஆதரவளித்தது.

காரணம் ii: சிவகங்கை வியாபாரிகள், தங்களது உள்நாட்டுக் கொள்கையில் கம்பெனியின் தலையீட்டை விரும்பினர்.

(1) காரணம் i சரி (2) காரணம் ii சரி

(3) இரண்டும் தவறு (4) இரண்டும் சரி

LIVEWORKSHEETS

113. கி.பி.1801 ல் கட்டபொம்மன் தம்பிகள் சென்ற இடங்களைக் கால வரிசைப்படுத்துக.

(அ) பாஞ்சாலங்குறிச்சி (ஆ) கமுதி

(இ) பாளையங்கோட்டை (ஈ) சிறுவயல்

(1) ஈ, இ, ஆ, அ (2) இ, ஆ, ஈ, அ (3) அ, இ, ஆ, ஈ (4) ஈ, அ, இ, ஆ

114. மருது சகோதரர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்றவர்கள்

(அ) சர்.ஜான் கிரடாக் (ஆ) கர்னல் அக்னியூ

(இ) கர்னல் இன்ஸ் (ஈ) பானர்மேன்

(1) அ, ஆ (2) ஆ, இ (3) இ, ஈ (4) ஈ, அ

115. தென்னிந்தியக் கிளர்ச்சியைத் தொடங்கியோர் உள்ள இக்குழுவில் பொருந்தாதவர் யார்?

(1) கேரளவர்மன் (2) கோபால நாயக்கர்

(3) கட்டபொம்மன் (4) கிருஷ்ணப்ப நாயக்கர்

116. மருது சகோதரர்களின் சுதந்திரப் பிரகடனம் எங்கு ஒட்டப்பட்டது?

(அ) திருச்சிக் கோட்டை (ஆ) காளையார் கோவில்

(இ) ஸ்ரீரங்கம் கோவில் (ஈ) சங்ககிரிக் கோட்டை

(1) அ, ஆ (2) ஆ, இ (3) இ, ஈ (4) இ, அ

117. பெரும் புரட்சியின் விளைவாக, செயலரின் தலைமையில் எத்தனை உறுப்பினர்கள் கொண்ட கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது?

(1) 15 (2) 18 (3) 14 (4) 12

118. தென்னிந்தியக் கிளர்ச்சியை அடக்க ஆங்கிலேயர்கள் எங்கிருந்து படைகளை வரவழைத்தனர்?

(அ) இங்கிலாந்து (ஆ) வங்காளம் (இ) ஸ்ரீலங்கா (ஈ) மலேசியா

(1) அ, ஆ, இ (2) ஆ, இ, ஈ (3) இ, ஈ, அ (4) அ, ஆ, ஈ

LIVEWORKSHEETS

119. வீரர்களையும் அவர்கள் தூக்கிலிடப்பட்ட கோட்டைகளையும் பொருத்துக.

(அ). மருது பாண்டியர் - (i). கயத்தாறு

(ஆ). ஊமைத்துரை - (ii). சங்ககிரி

(இ). கட்டபொம்மன் - (iii). பாஞ்சாலங்குறிச்சி

(ஈ). தீரன் சின்னமலை - (iv). திருப்பத்தூர்

(1) அ - iv, ஆ - iii, இ - I, ஈ - ii (2) அ - iv, ஆ - I, இ - iii, ஈ - ii

(3) அ - ii, ஆ - iii, இ - I, ஈ - iv (4) அ - I, ஆ - ii, இ - iii, ஈ - iv

120. வீரர்களையும் அவர்கள் தூக்கிலிடப்பட்ட நாட்களையும் பொருத்துக.

(அ). மருது பாண்டியர் - (i). 24.10.1801

(ஆ). ஊமைத்துரை - (ii). 31.7.1805

(இ). கட்டபொம்மன் - (iii). 16.11.1801

(ஈ). தீரன் சின்னமலை - (iv). 17.10.1799

(1) அ - iv, ஆ - iii, இ - I, ஈ - ii (2) அ - I, ஆ - iii, இ - iv, ஈ - ii

(3) அ - ii, ஆ - iii, இ - I, ஈ - iv (4) அ - I, ஆ - ii, இ - iii, ஈ - iv

121. மலேசியாவின் பினாங்குத் தீவிற்கு வேறொரு பெயர் எது?

(1) நறுமணத்தீவு (2) இலட்சத்தீவு

(3) வேல்ஸ் இளவரசர் தீவு (ஈ) விக்டோரியா தீவு

122. தென்னிந்தியக் கிளர்ச்சியாளர்கள் எத்தனை பேர் நாடுகடத்தப்பட்டனர்?

(1) 72 (2) 73 (3) 71 (4) 70

123. கூற்றுகளை ஆராய்க.

(அ). மருதுபாண்டியர் மேற்கொண்ட போர், ஆங்கில ஆவணங்களில் இரண்டாம் பாளையக்காரர் போர் என அழைக்கப்படுகிறது.

(ஆ). 1801, ஜூலை 31 ல் செய்துகொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கையின்படி பாளையக்காரர் முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது.

(1) ஆ மட்டும் சரி (2) ஆ மட்டும் தவறு

LIVEWORKSHEETS

(3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

124. கூற்றுகளை ஆராய்க.

(அ). கொங்குநாடு என்பது சேலம், கோவை, கரூர் மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

(ஆ). கொங்குநாடு ஆங்கிலேயருக்குப் பின் மைசூர் சுல்தான்கள் வசம் சென்றது.

(1) ஆ மட்டும் சரி (2) ஆ மட்டும் தவறு

(3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

125. கூற்றுகளை ஆராய்க.

(அ). தீரன் சின்னமலை 1800 ல் கோயம்புத்தூரில் ஆங்கிலேயர்களைத் தாக்கினார்.

(ஆ). அதற்காக மராத்தியர் மற்றும் மருது பாண்டியரின் உதவியை நாடினார்.

(1) ஆ மட்டும் சரி (2) ஆ மட்டும் தவறு

(3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

126. தீரன் சின்னமலை கீழ்க்காணும் எவ்விடங்களில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்தார்?.

(அ) ஓடாநிலை (ஆ) அரச்சலூர் (இ) சங்ககிரி (ஈ) காவேரி

(1) ஈ, இ, ஆ (2) இ, ஆ, ஈ (3) அ, இ, ஆ (4) ஈ, அ, ஆ

127. தீரன் சின்னமலையைக் காட்டிக் கொடுத்தவர் யார்?

(1) தொண்டைமான் (2) நல்லப்பன் (3) எட்டப்பன் (4) பொல்லான்

128. கூற்றுகளை ஆராய்க.

(அ). திப்புசுல்தான் பணியாளர்கள் மற்றும் வீரர்கள் 5000 பேரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப் பட்டன.

(ஆ). பாளையக்கார வீரர்கள் ஆங்கிலப் படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

(இ). வேலூர் கலகத்தில் 113 ஐரோப்பியர் கொல்லப்பட்டனர்.

(1) ஆ மட்டும் சரி (2) அ மட்டும் தவறு

LIVEWORKSHEETS

(3) இ மட்டும் தவறு (4) எல்லாம் சரி

129. வேலூர் கலகத்தின் போது சென்னை மாகாணப் படைத் தளபதி யார்?

(1) சர்.ஜான் கிரடாக் (2) வில்லியம் பெண்டிங்

(3) கில்லெஸ்பி (4) கர்னல் அக்னியூ

130. சிலுவைச் சின்னத்துடன் கூடிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தியவர்

(1) அக்னியூ (2) கில்லஸ்பி (3) ஜான் கிரடாக் (4) கர்னல் இன்ஸ்

131. அக்னியூ தலைப்பாகை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?

(1) ஜூலை 1806 (2) ஜூன் 1801 (3) ஜூன் 1806 (4) ஜூலை 1805

132. வேலூர் கலக்கத்தைப் பற்றி கர்னல் கில்லஸ்பிக்குத் தகவல் கொடுத்தவர் யார்?

(1) மேஜர் பானர்மேன் (2) மேஜர் கிரடாக்

(3) கர்னல் அக்னியூ (4) மேஜர் கூட்ஸ்

133. வேலூர் புரட்சியை அடக்கியவர்

(1) கர்னல் கில்லஸ்பி (2) கர்னல் அக்னியூ

(3) கர்னல் இன்ஸ் (4) மேஜர் பான்சோர்

134. வேலூர் புரட்சியில் கொல்லப்பட்ட சிப்பாய்களின் எண்ணிக்கை

(1) 113 (2) 1080 (3) 350 (4) 73

135. வேலூர் கலகத்தின் விளைவுகளை ஆராய்க.

(அ) சீருடைகள் ஒழுங்குமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

(ஆ) திப்புவின் குடும்பத்தினர் ரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

(இ) வில்லியம் காவெண்டிஷ் பிரபு பதவியை ராஜினாமா செய்தார்.

(1) அ மட்டும் சரி (2) ஆ மட்டும் தவறு

(3) அ, ஆ சரி (4) அனைத்தும் தவறு

136. வேலூர் கலகத்தின் தோல்விக்கான காரணங்களை ஆராய்க.

LIVEWORKSHEETS

(அ) சரியான தலைமை இல்லாமை

(ஆ) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை.

(இ) புரட்சி சரியாகத் திட்டமிடப்படவில்லை.

(ஈ) சீக்கியர்கள், ஆப்கானியர்கள் போன்றோரின் அன்னியர் விசுவாசம்.

(1) அ, ஆ, இ சரி (2) ஆ, இ, ஈ சரி

(3) அ, ஆ, ஈ சரி (4) அனைத்தும் சரி

137. வேலூர் புரட்சி மற்றும் தென்னிந்தியக் கிளர்ச்சி ஆகிய இரண்டிலும் தொடர்புடையவர்

(1) மருதுபாண்டியர் (2) திப்புசுல்தான்

(3) கர்னல் அக்னியூ (4) கர்னல் கில்லஸ்பி

138. வேலூர் புரட்சி மற்றும் 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி ஆகிய இரண்டும் தோன்றியதற்கான பொதுவான காரணத்தைத் தேர்ந்தெடு.

(1) ஆங்கிலேயரின் பொருளாதார ரீதியான சுரண்டல் கொள்கை.

(2) புதிய வகைத் தலைப்பாகை அறிமுகப்படுத்தப்பட்டது.

(3) சதி ஒழிப்பு, பெண் சிசுக்கொலை ஒழிப்பு, விதவை மறுமணம் போன்றவற்றிற்கான ஆங்கிலேயரின் நடவடிக்கைகள்.

(4) இந்திய சிப்பாய்கள் ஆங்கில அதிகாரிகளால் தாழ்வாக நடத்தப் பட்டனர்.

139. முறையற்ற வகையில் ஆங்கிலேயர்கள் இணைத்துக் கொண்டதாகக் கருதப்படும் இந்தியப் பிரதேசம் எது?

(1) ஹைதராபாத் (2) அயோத்தி (3) தஞ்சாவூர் (4) உதய்பூர்

140. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சியின் காரணங்களில் தவறானதைத் தேர்ந்தெடு.

(1) வாரிசு இழப்புக் கொள்கை, துணைப்படைத்திட்டம் போன்றவை மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

(2) மதமாற்று நடவடிக்கைகள் காரணமாக மௌல்விகள் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

LIVEWORKSHEETS

(3) திப்புசுல்தான் குடும்பத்தினர் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு எதிராக வெறுப்பில் இருந்தனர்.

(4) இராணுவத்தில் பதவி உயர்வுகள் அனைத்தும் ஆங்கிலேயர்களுக்கே வழங்கப் பட்டன.

LIVEWORKSHEETS